நேரு குழந்தைகள் புத்தகாலயம்

சாகசக்கார ஆடு

பாருல் பத்ரா

தமிழாக்கம்: ருத்ர துளசிதாஸ்

சித்திரங்கள் : ஆர்ய ப்ரஹராஜ்




nbt.india
एकः सूते सकलम्

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

இந்தக் கதையின் நாயகன் ஓர் ஆடுதான் என்றாலும் அந்த ஆட்டுக்குத் தனிச் சிறப்பு ஏதும் கிடையாது. அது ஒரு சாதாரண ஆடுதான். அது வெள்ளை நிறம் உடையது அல்ல. எனவே அதன் பெயர் வெள்ளச்சி என்று சொல்ல முடியாது. கறுப்பும் இல்லை என்பதால் அதைக் கறுப்பி என்றும் அழைக்க முடியாது. உண்மையில் அது மண் நிறத்து ஆடு. எனவே அதனுடைய பெயர் மண்ணி என்று சொல்லலாமா... இல்லை, இல்லை. அப்படியெல்லாம் ஒரு பெயரும் வைப்பதில்லை.

ஆடு எங்கே வசித்து வந்தது? இதைப் பற்றியும் குழப்பமடையத் தேவையே இல்லை. ஏனென்றால், அதற்கு வீடே இல்லை. அதனுடைய முதலாளி தன்னுடைய வீட்டிலிருந்து அதை விரட்டிவிட்டார். ஏன் தெரியுமா? ஒன்று, முதலாளிக்கு அதனால் எந்தப் பயனும் இல்லை, அல்லது அதனுடைய பழக்கவழக்கம் அப்படி இருந்திருக்க வேண்டும்.

ஆட்டின் நாட்கள் தன்போக்கில் கழிந்தன. அது பாட்டுக்கு, “கண்ணை நம்பாதே, உன்னை ஏமாற்றும், உன்னை ஏமாற்றும் நீ காணும் தோற்றம்...” என்று பாடிக்கொண்டே திரிந்தது. தன்னுடைய முதலாளியின் வீட்டில் வாழ்ந்திருந்த நாட்களைப் பற்றி அதற்கு அடிக்கடி நினைவு வரும்.



புல் பரப்பிய கொட்டடியில் மற்ற பிராணிகளுடன் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் நினைவுக்கு வரும். ஆனால் அவற்றில் இனியவை கொஞ்சம்தான், துன்ப நினைவுகள்தான் அதிகம்.


ஆட்டுக்கு தீனி தின்பது என்றால் மிகவும் பிரியம். குழந்தைப் பருவத்தில் ஆட்டின் பெற்றோர்கள் அதற்கு ‘போபக் ஆடு’ என்ற கதையைச் சொல்லியிருக்கிறார்கள். இதுவும் போபக் ஆடு போல பேராசை கொண்டதென்று சொல்லியிருந்தார்கள். அந்தக் கதை நினைவிருக்கிறது அல்லவா? ஒரு தடவை அந்த போபக் ஆடு கள்ளிச் செடியைத் தின்றுவிட்டது! மழைக் காலத்தில் அது புல்லுக்கட்டில் வாயை வைத்தபோது ஒரு தேள் அதன் மூக்கின் மீது கொட்டி விட்டது!




போபக் ஆடு செய்தது போல நாக்கை அரிக்கும் எந்தச் செடியையும் தான் தின்றதில்லை என்று நினைத்துக் கொண்டது. ஒருவேளை போபக் ஆடு அதையும் தின்றிருக்கலாம்.

நம்முடைய ஆட்டுக்கு இளம் வயதிலிருந்தே கதைகளைக் கேட்கவும் படிக்கவும் விருப்பம் இருந்தது. ருஷ்யக் கதையான ‘அதிசய ஆடு’ என்ற கதையைக் கேட்ட பிறகு தனக்கும் அதைப்போலவே ஐந்து கொம்புகளும் வெள்ளிக் குளம்புகளும் இருப்பது போல கனவு காணத் தொடங்கியது.

ஒரு நாள் அது சாயம்பூசிய குள்ளநரியைப் பற்றிய கதையைப் படித்தது. அதில் குள்ளநரி நீலநிற சாயத் தொட்டியில் விழுந்துவிட்டது. தானும் அதேபோல்





செய்ய நினைத்தது அந்த ஆடு. அன்றைய தினம் முதலாளியின் வீட்டில் வெள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள். வீட்டு முற்றத்தில் வைக்கப் பட்டிருந்த சுண்ணாம்பு நீர்த் தொட்டியில் ஆடு குதித்தது. தன்னுடைய பழுப்பு நிறம் மறைந்து வெள்ளையாகி விடுவோம் என்று நினைத்தது. நிறம் என்னவோ வெள்ளை ஆனது, ஆனால் முதலாளியிடம் சரியான அடி வாங்கியது.

ஆடு இன்னும் கொஞ்சம் பெரிதான பிறகு, ‘அப்பு வளர்த்த ஆடு’ என்ற கதை நினைவுக்கு வந்தது. ‘அந்தக் கதையில் வரும் ஆடு, ஓநாயுடன் சண்டையிட்டு விரட்டியடிக்க முடியும்போது, இந்த முதலாளியின் வளர்ப்பு நாய் சிம்மன் எனக்கு முன் எம்மாத்திரம்?’ என்று நினைத்தது ஆடு. சிம்மனின் மீது குறி பார்த்துப் பாய்ந்தது. அந்த சமயத்தில் சிம்மன் சாப்பிட்டுக்கொண்டிருந்தது. ஆட்டின் திமிரைக்கண்டு கோபமடைந்து பின்பக்க வலது காலை நறுக்கெனக் கடித்துவிட்டது சிம்மன்.

நம்முடைய ஆடு எப்போதும் தோல்வியை ஒப்புக்கொண்டதில்லை! முதலாளி தினமும் காலையும் மாலையும் சிம்மனுடன் உலவச் செல்வதும், அதனுடன் விளையாடுவதும் உண்டு. ஆனால் அவர் தன்னுடன் ஒருபோதும் உலவச் சென்றதில்லை, பந்தை எறிந்து எடுத்து வரச் சொல்வதும் இல்லை என்பது சில நாட்களுக்குப் பிறகுதான் ஆட்டுக்குப் புரிந்தது

முதலாளியின் கொட்டிலில் இருந்த பசுக்களின் மீது மிகுந்த அக்கறை காட்டப்பட்டது. அவற்றுக்கு பசும்புல் தீனியும் எப்போதும் இருந்தது. சிம்மனுக்கும் தனியாக வீடு இருந்தது. சாப்பிடுவதற்கு தட்டு இருந்தது, குடிப்பதற்கான தண்ணீர் பாத்திரம்கூட இருந்தது.

ஆனால் ஆட்டுக்கு...?




சிம்மனின் கழுத்தில் முதலாளி ஒரு வளையத்தைக் கட்டியிருந்தார். சிம்மன் அதனால் கர்வத்துடன் நடந்தது. மாடுகளின் கழுத்தில் மணிகள் கட்டப்பட்டிருந்தன. ஆனால் தன் கழுத்தில் மட்டும் முதலாளி எதுவுமே கட்டவில்லை! ஆனால், சிம்மன் ஆட்டைக் கடித்துக் காயப்படுத்திய பிறகு ஆட்டை பல நாட்கள் கயிற்றால் கட்டி சிறை வைத்திருந்தார்.

“அவருக்கு தன்னைப்பற்றிக் கவலையே இல்லை.”

ஆடு வேறு ஏதாவது குறும்பு செய்ய நினைக்கும் முன்பே முதலாளி அதை வீட்டைவிட்டு வெளியே விரட்டி விட்டுவிட்டார்.

சில சமயங்களில் வீட்டிற்கே திரும்பிப் போய்விடலாமா என்றுகூடத் தோன்றும். தெருவில் சுற்றும் ஆட்டுக்கு நண்பர்கள் யாரும் இல்லை. சாப்பிடுவதற்கு அலைந்து திரிந்து தேட வேண்டும். ஆனாலும்






இப்போது தானே ராஜா, தானே மந்திரி என்ற சுதந்திரம் இருந்தது. தெருவில் இருக்கும் தள்ளுவண்டிக்கு அடியில் சத்தமில்லாமல் நுழைந்து கொஞ்சம் பழங்களைத் திருடித் தின்பது; பிறருடைய கண்களுக்குத் தட்டுப்படாமல் காய்கறிகளைத் தின்பது; வேலியைத் தாண்டிக் குதித்து வீட்டுத் தோட்டங்களுக்குள் நுழைந்து, பசும் புல்லையும் செடிகளையும் தின்று தீர்ப்பது; இதிலெல்லாம் எவ்வளவு ஆனந்தம் இருக்கிறது! வளர்ப்பு

நாய்களை ஏமாற்றுவதிலும் ஆனந்தம் இருக்கிறது. பாவம், நாய்களுக்கு தன்னைப்போல் விடுதலை கிடையாதே! கட்டிப் போட்டிருக்கிறார்களே! லொள்-லொள்... என்று குரைத்துவிட்டுப் போகட்டும். இந்த ஆடு, வீடுகளின் வளர்ப்பு நாய்களின் கண்ணுக்கு எதிரிலேயே பல முறை உணவைத் திருடியதும் உண்டு.

காலை விடிந்ததிலிருந்து அகலமான அல்லது குறுகலான சாக்கடைகளைத் தாண்டிக் குதித்துச் செல்வது, உயரமான பாலங்களின் ஓரத்தில் இருக்கும் நடைபாதையில் நடப்பது, மக்களும் வாகனங்களும் பரபரப்பாகப் போகும் சாலையில் கால்களில் சக்கரங்கள் கட்டிக்கொண்டு ஸ்கேட்டிங் போவது போல வாகனங்களிடமிருந்து தப்பித்து ஓடுவது, இதெல்லாம் அதனுடைய அன்றாட வாடிக்கை. இப்படியொரு வாழ்க்கை வேறு யாருக்கு எப்படி இருக்குமோ தெரியாது, ஆனால் அச்சமற்ற மனநிலையில் இருந்த ஆட்டுக்கு இதில்தான் நிம்மதி கிடைத்தது.





இப்படியே சுற்றிக்கொண்டிருந்த ஆடு, ஒரு நாள் நகரின் நடுவில் இருந்த மைதானத்தை அடைந்தது. அங்கே வழக்கமாக ஆடுமாடுகள் சுற்றித் திரிந்துகொண்டிருக்கும். அதன் பக்கத்தில் செடிகொடிகள் நிறைந்த பகுதியும் இருந்தது. ஆனால் இப்போது அதெல்லாம் காணவில்லை. அங்கே புதிதாக ஒரு கூடாரம் முளைத்திருந்தது. ஏராளமான மக்கள் கூட்டம். பாட்டும் வாத்தியங்களுமாகக் காதைத் துளைக்கும் சத்தம். கண்ணுக்குத் தெரிந்த வரை, ஊஞ்சல்கள், ராட்டின தூரிகள், கடைகள் என ஒரே கோலாகலமாக இருந்தது. இதெல்லாமே ஆட்டுக்குப் புதிய அனுபவம் !


“என்ன நடக்குது இங்கே? என்னான்னு தெரிஞ்சாகணும்... ரொம்ப ஜாலியா இருக்கும்போல இருக்கே?!” என்று யோசித்தவாறே நாலாபுறமும் பார்த்தது. பெரியதொரு வாசலும், மரத்தால் செய்த படிகளும் இருந்தன. மக்கள் அந்தப் படிகளின் வழியாக உள்ளே போனார்கள். நான்கு பக்கமும் சுவர்கள் போல கட்டைகள் வைத்து அடைக்கப்பட்டிருந்தது. உள்ளே செல்வதற்காக படிகளின் அருகே சென்றது ஆடு. ஆனால் அங்கே இருந்த காவல்காரர், தன் கையில் இருந்த தடியைத் தூக்கி மிரட்டி விரட்டினார். கூடவே ஏதோ சத்தம்போட்டு



திட்டவும் செய்தார். பசுவாக இருந்தால் துள்ளி ஓடியிருக்கும். நாயாக இருந்திருந்தால் வாலைச் சுருட்டிக்கொண்டு ஓடிப்போயிருக்கும். குதிரையாக இருந்தால் ஹி...ஹி... என்று கனைத்துக்கொண்டு ஓடிப் போயிருக்கும். ஆனால் இதுவோ நமது ஆடு. எனவே தலையைக் குனிந்து கொண்டு அங்கிருந்து நகர்ந்தது.

அப்போதுதான் மரப்படிகளுக்குக் கீழே இடைவெளி இருப்பது ஆட்டின் கண்களில் பட்டது. கால்களை மடக்கி, அந்தச் சின்ன இடைவெளியின் வழியாக ஏறத்தாழ ஊர்ந்தபடி எளிதாக உள்ளே போய்விட்டது. உள்ளே பெரும் கூட்டமாக இருந்தது. எங்கே பாத்தாலும் ஆட்கள் – குழந்தைகள், பெரியவர்கள் எல்லாரும் அங்கே இருந்தார்கள். தொடக்கம் எது, முடிவு எது, ஒன்றும் புரியவில்லை.

எதிரே ஐஸ்க்ரீம் கடை இருந்தது. எல்லாக் குழந்தைகளும் தங்கள் அம்மா-அப்பாக்களுடன் அங்கே ஐஸ்க்ரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆடு தன் வேட்டையைத் தேடத் தொடங்கியது. ஒரு சிறுவன் ஐஸ்க்ரீமை சப்பிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஆடு அந்தச் சிறுவனைப் பார்த்தது. ஏறத்தாழ ஆட்டின் உயரம்தான் இருந்தான் அவன். ஆடு அவன் பக்கமாகச் சென்று, லேசாக ஒரு முட்டு முட்டியது. சிறுவன் கையில் இருந்த ஐஸ்க்ரீம் கீழே விழுந்து விட்டது.



“அடடா... இப்படிக் கீழே போட்டுட்டியே...?” என்று அம்மா சிறுவனைத் திட்டினாள். சிறுவன் இப்போது அழத் தொடங்கினான்.

“சரி சரி... போகட்டும். இன்னொன்னு வாங்கிக்கலாம்” என்று அவனை அம்மா சமாதானப்படுத்த, இருவரும் கடைக்குப் போனார்கள். கீழே விழுந்திருந்த சாக்லெட் ஐஸ்கிரீமை சுவைத்துச் சாப்பிட்டது ஆடு. இதேபோலச் செய்து, பாப்கார்னும் சுண்டலும் கூட தின்றது.

ஆட்டின் பார்வை இப்போது பெரியதொரு கூடாரத்தின் பக்கம் சென்றது. அங்கே பிரகாசமான விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன.

“அங்கே என்னதான் நடக்கிறது?” என்று ஆடு தலையை நிமிர்த்திக் கூடாரத்தின் உச்சியை உன்னிப்பாகப் பார்த்தது. ஆட்கள் வரிசையாக உள்ளே போய்க் கொண்டிருந்தார்கள். இந்தத் தடவையும் ஆடு பின்புற வழியாகத் தவழ்ந்து உள்ளே போகத் தெரிந்து கொண்டது.

கூடாரத்தின் நட்டநடுவில் இருந்த மேடையில் விதவிதமான பொருட்கள் இருந்தன. சிலர் ஆகாயத்தில் ஊஞ்சல் ஆடினார்கள். இன்னொரு பக்கம், ஒரே சைக்கிளில் இருபது பேர் சுற்றி வந்தார்கள். அதற்குப் பிறகு சில பெண்கள் வண்ண வண்ண வளையங்களை சுற்றத் தொடங்கினார்கள். அதைப் பார்க்கப் பார்க்க ஆட்டின் தலையும் சுற்றத் தொடங்கியது. அப்புறம் பெண்கள் வளையங்களிலிருந்து குதித்தபடி வெளியேறிப் போனார்கள்.






இதையெல்லாம் பார்த்துக் கொண்டே நின்றிருந்த ஆட்டுக்கு உற்சாகம் ஏற்பட்டது. அதனுடைய காதுகள் மேல் நோக்கி விறைத்துக் கொண்டன. கால் குளம்புகள் தரையைக் கிளறிக்கொண்டிருந்தன.

‘இதென்ன பெரிய விஷயம்... நானும்கூடத்தான் செய்வேன்...’ என்று நினைத்தவாறே ஆடு அந்த மேடையின் மத்தியில் போய் நின்றது. இங்கே என்ன நடக்கிறது என்று மற்றவர்களுக்குப் புரிவதற்குள் ஆடு மூன்று வளையங்களுக்குள் குதித்து வெளியே வந்தது. கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். ஆனால் மேடையில் இருந்தவர்களுக்கு ஆட்டின் செய்கை ஏனோ பிடிக்கவில்லை போல. சிலர் ஆட்டைப் பிடிக்க ஓடி வந்தார்கள். அதற்குள் ஆடு அங்கிருந்து ஓடி ஒளிந்துகொண்டது.

மற்றோர் இடத்தில் ஒருவர் தரையில் உட்கார்ந்திருந்தார். அவருக்கு முன்னால் தரையில் வட்டமான ஒரு பொருள் வைக்கப்பட்டிருந்தது. போவோர் வருவோர் பலர் அதன் மேல் ஏறி நின்றார்கள், கீழே குனிந்து

எதையோ பார்த்துவிட்டுப் போனார்கள். ஒல்லியான ஒரு பெண் அதன்மீது ஏறி நின்று, கீழே பார்த்தாள். மகிழ்ச்சியுடன் சிரித்துக் கொண்டே போனாள். பருமனாக இருந்த ஒரு மனிதரும் அந்த வட்டப் பொருள் மீது நின்று குனிந்து பார்த்தார், சற்று வருத்தமான முகத்துடன் போனார்.

“அது என்னவாக இருக்கும்?’ என்று யோசித்தது ஆடு. பூனை போல மெள்ள மெள்ள அடி எடுத்து வைத்து அந்த மனிதருக்குப் பின்னால் போய் நின்று கொண்டது. அவருடைய கவனம் வேறொரு பக்கம் திரும்பியதும் ஆடு சட்டென்று குதித்து முன்னே போய் அந்த வட்டப்பொருள் மீது ஏறி நின்றது. அந்தப் பொருள் லேசாக அசைந்தது. ஆடு சிரமப்பட்டுத் தன்னுடைய நான்கு கால்களையும் அந்த வட்டத்துக்குள் சமாளித்து நின்று கொண்டது. கீழே குனிந்து பார்த்தது. ஆனால் ஒன்றும் புரியவில்லை. அதனால் என்ன... அங்கே வந்த எல்லாரும் செய்த ஒன்றை தானும் செய்தோம் என்று திருப்தி அடைந்தது ஆடு.



மேலும் முன்னேறி உள்ளே சென்றபோது நாலாபக்கமும் விதவிதமான ராட்டின தூரிகள் இருந்தன. சில தூரிகள் அதிக உயரத்தில் இருந்தன. மேலிருந்து கீழாக, கீழிருந்து மேலாக அவை வேகமாக வந்து போய்க்கொண்டு இருந்தன. கார் போலவும், விமானம் போலவும் இருக்கைகள் கொண்ட ராட்டின தூரிகளும் இருந்தன. அவை வட்டமாகச் சுற்றிக்கொண்டிருந்தன. தண்டவாளத்தில் ஓடும் ஒரு சின்ன ரயிலும்கூட இருந்தது.



தூரியைப் பாத்ததும் ‘அம்பாவுக்கு என்றொரு ஊஞ்சல்’ என்ற புத்தகம் நினைவுக்கு வந்தது. அந்தக் கதையில் வரும் அம்பா என்ற பசுவால் ஊஞ்சலாட முடியும்போது தன்னால் ஏன் முடியாது என்று நினைத்தது ஆடு. கதையில் வந்த அந்தப் பசு, மரத்தில் கட்டிய கயிற்றுத் தூரியில் ஆடியது. நான் இந்தத் திருவிழா தூரியில் ஆடப்போகிறேன் என்று நினைத்துக்கொண்டது.

கூட்டம் நிரம்பியிருந்த இடத்தில் ஆடு ஒன்று சுற்றித் திரிவதைப் பார்த்தவர்கள், ‘பாவம், தின்பதற்கு ஏதாவது கிடைக்குமா என்று தேடி அலைகிறது’ என்று நினைத்திருப்பார்கள். ஆனால் ஆட்டின் எண்ணம் வேறாக இருந்தது.

சிறுவர்களுக்கான குடை ராட்டினத்தில் ஆடுவதென தீர்மானித்தது. கார் போன்ற இருக்கைகள் கொண்ட ராட்டினத்தை சுற்றியிருந்த தடுப்பின் உயரம் அதிகமில்லை. ஒரு தோட்டத்திற்குள் தாவிக் குதிப்பதுபோல் எளிதாக தாவிக் குதித்து உள்ளே போனது. அந்த சமயத்தில் ராட்டினம் நின்றிருந்தது. அதன் சொந்தக்காரர், காத்திருக்கும் குழந்தைகளுக்கு டிக்கெட் கொடுத்தார். பிறகு அவர்கள் கார்களில் உட்காருவதற்கு உதவி செய்தார். அதைப் பார்த்ததும் ஆட்டுக்கு உற்சாகம் பொங்கியது. அது சட்டெனக் குதித்து ஒரு காருக்குள் ஏறி அதன் இருக்கைக்குக் கீழே ஒளிந்து உட்கார்ந்து கொண்டது. அதிர்ஷ்டவசமாக, ஆடு பதுங்கியிருந்த காரின் இருக்கைக்கு யாரும் வராமல் காலியாகவே இருந்தது. சிறிது நேரத்தில் ஊஞ்சல் நகர ஆரம்பித்து வட்ட வட்டமாகச் சுற்றத் தொடங்கியது.

மெள்ள மெள்ள ராட்டினத்தின் வேகம் அதிகரித்தது. ‘ஆஹா! எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது!’ ஆட்டின் மனம் ராட்டினத்தின் வேகத்திற்கு ஏற்ப மகிழ்ச்சி அடைந்தது. கதையில் படித்த அம்பா பசுவுக்கு இவ்வளவு ஆனந்தம் கிடைத்திருக்க முடியாது. ராட்டினம் சுற்றுவது நின்றதும் ஆடு எழுந்து நின்றது, மகிழ்ச்சியால் “மே...” என்று கத்தியது.

“அட...! இதென்ன தலை சுற்றுகிறது...!’ ராட்டினத்திலிருந்து இறங்கிய எல்லாக் குழந்தைகளும் ஆரவாரத்துடன் கூச்சலிட்டனர். அவர்கள் இப்போதுதான் முதன்முதலாக ஓர் ஆட்டுடன் குடை ராட்டினம் சுற்றியிருக்கிறார்கள். ஆடு எல்லாரையும் பெருமையுடன் பார்த்தது. ஏதோ தான் ராட்டினத்தில் சுற்றுவதற்காக வருவது வழக்கம்தான் என்பது போன்ற மிதப்புடன் சுற்றிலும் பார்த்துவிட்டு அமைதியாக ஊஞ்சலிலிருந்து குதித்து அங்கிருந்து நகர்ந்தது.

இப்போது வயதாகி பாட்டியாகிவிட்ட அந்த ஆடு, அந்தத் திருவிழாவுக்குப் போய் வந்த கதைகளை மிகவும் ஆர்வத்துடன் தனது பேரன்-பேத்திகளுக்கு இன்றைக்கும் கதை கதையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

